(14)

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

First two pages from the Committee Report on Loss and Removal of Trees, November 2017

Paragraph 7 explains that Mercantile Security had to resort to an unofficial record for reasons of confidentiality

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் மரங்கள் களவாடப்பட்டது தொடர்பான பூர்வாங்க விசாரணை அறிக்கை**

மேற்படி விடயம் தொடர்பாக YA/R/S 09.10.2017ம் திகதிய கடிதம் தொடர்பானது. கிளிநொச்சி வளாகத்திலுள்ள மரங்கள் களவாடப்பட்டமை தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகள் விசாரணை உத்தியோகத்தர்களான எம் முன்னிலையில் 17.10.2017, 21.10.2017 மற்றும் 02.11.2017 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. இவ்விசாரணைக்கு 17.10.2017ல் திரு.அருட்செல்வம் அரவிந்தன் (வேலைப் பொறியியலாளர்) மற்றும் திரு.நாகராசா சுதர்சன் (வேலை மேற்பார்வையாளர்), 21.10.2017ல் திரு.சுப்ரமணியம் குகதாசன் (விவசாயபீட சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்), திரு.வேலு சுப்ரமணியம் (ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர்), திரு.குமாரசாமி தர்மசீலன் (கவனிப்பாளர் - பல்கலைக்கழக விருந்தினர் விடுதி, கிளிநொச்சி வளாகம்) மற்றும் திரு.சக்திவேல் சுதர்சன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்) மற்றும் 02.11.2017ல் திரு.செல்லத்துரை அருட்செல்வன் (பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்), திரு.சண்முகம் கங்காகரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), திரு.சின்னத்தம்பி நாகேந்திரன் (ஊழியர் - விவசாயபீடம்) மற்றும் திரு.கணபதிப்பிள்ளை ஜனாதீபன் (பராமரிப்பு மேற்பார்வையாளர்) ஆகியோர் விசாரணை செய்யப்பட்டு அவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டன. இங்கு பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் பின்வரும் அவதானிப்புக்களை காணக்கூடியதாக உள்ளது.

**அவதானிப்புக்கள்**

1. முதலாவதாக, திரு.அருட்செல்வம் அரவிந்தன் (வேலைப் பொறியியலாளர்) அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது வேலைப் பொறியியலாளர் குறித்த வேலையை வேலை மேற்பார்வையாளர் திரு.நாகராசா சுதர்சன் என்பவரிடம் ஒப்படைத்திருந்தார். இது தொடர்பாக எந்தவித தொடர்நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை. அத்துடன் வெட்டப்படவேண்டிய மரங்கள் தொடர்பாக சரியாக அடையாளங்காட்டப்படவில்லை. மேலும், மரங்களை வெட்டுவதற்கான செலவினம் தொடர்பாகவோ வெட்டப்பட்ட மரங்களை அகற்றுதல் தொடர்பாகவோ எந்தவித அறிவுறுத்தல்களையும் வழங்கத் தவறியுள்ளார். மேலும். வேலை முடிவுற்றமை தொடர்பாக ஆராய்ந்துபார்க்க முயலவில்லை.
2. வேலை பொறியியலாளர் மற்றும் அவருக்குக் கீழ் பணிபுரியும் மேற்பார்வையாளர்களுக்கிடையே சரியானதொரு புரிந்துணர்வு மற்றும் வெளிப்படைத்தன்மை இன்மையும் அவரின் கீழ் பணிபுரியும் மேற்பார்வையாளர் தாமாக முடிவெடுக்கும் தன்மைக்கு இடமளிக்கும் தன்மையையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இது அவர் தனது கடமை மற்றும் பதில்கூறும் தன்மையிலிருந்து விலகியிருந்தது அவதானிக்கக்கூடியதாக உள்ளது.
3. இரண்டாவதாக, திரு.நாகராசா சுதர்சன் (வேலை மேற்பார்வையாளர்) அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது துறைத்தலைவரால் அடையாளம் காட்டப்பட்ட மரங்களுக்கு மேலதிகமாக மரங்கள் வெட்டியமையும் வெட்டிய மரங்களை எவ்வித அனுமதியுமின்றி சட்டவிரோதமான முறையில் வெளியே கொண்டுசென்றமையும் தெளிவாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது.
4. இவ்வேலை தொடர்பாக தானே சுயமான முறையில் தீர்மானங்களை மேற்கொண்டமையையும் இச் சட்டவிரோத செயலுக்கு திரு.குமாரசாமி தர்மசீலன் (கவனிப்பாளர் - பல்கலைக்கழக விருந்தினர் விடுதி, கிளிநொச்சி வளாகம்) என்பவருடைய உதவியுடன் கூட்டாக திட்டமிட்ட முறையில்

A.C. Thavarasa

மேற்குறித்த வேலையை தங்களுக்குப் பயன்தரு வகையில் செய்துமுடித்தனர் என அவதானிப்புக்குத் தெரியவந்துள்ளது.

5. வேலை நிறைவேற்றப்பட்டது தொடர்பாக வேலைப் பொறியியலாளருக்கு தெரியப்படுத்தப்படாமை, மரங்கள் வெட்டப்பட்டு தீராந்திகளாக அறுக்கப்பட்டு வெளியே கொண்டுசெல்லும்வரை குறித்த வளாத்தில் இருந்ததுடன் பாதுகாப்பு அலுவலர்களிடம் மரங்களை வெளியே கொண்டசெல்வதற்கு வாய்மொழிமூலம் அனுமதிக்குமாறு கூறியமையும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. மேலும், இவருடன் கூட்டுச்செயலில் ஈடுபட்ட திரு.குமாரசாமி தர்மசீலன் (கவனிப்பாளர் - பல்கலைக்கழக விருந்தினர் விடுதி, கிளிநொச்சி வளாகம்) என்பவர் நெருங்கிய உறவினர் என்பதும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

6. விசாரணை ஆரம்பித்ததன் பின்னர் இது தொடர்பான சாட்சியாளராக அழைக்கப்படவிருந்த திரு.வேலு சுப்ரமணியம் (ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர்) என்பவரது வீட்டிற்குச் சென்று தனக்குச் சாதகமான முறையில் சாட்சியமளிக்குமாறும் அவ்வாறு கூறினால் உதவி செய்வதாகவும் கூறியது திரு.வேலு சுப்ரமணியம் என்பவரது விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

7. மேலும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் பேணப்படும் பதிவேடுகளை வேலை மேற்பார்வையாளர் திரு.நாகராசா சுதர்சன் பார்வையிடுவதனால் பிரத்தியேகமான முறையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பதிவுகளை மேற்கொண்டனர். இப்பிரத்தியேக பதிவுகள் பேணப்பட்டமை தொடர்பில் பிரதிப் பதிவாளர் மற்றும் வேலைப் பொறியியலாளர் விசாரித்த போது பிரத்தியேகப் பதிவேடு காண்பித்தது தொடர்பில் தொலைபேசி ஊடாக பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தொடர்புகொண்டு வினவியதோடு வினவியது தொடர்பில் பிரதிப் பதிவாளருக்குத் தெரியப்படுத்த வேண்டாம் என்றும் கூறியிருந்தமை அவரது குற்றச் செயல்களை நிரூபிக்கும் ஒரு சான்றாக அமைகின்றது.

8. மேலும். பாதுகாப்பு உத்தியோகத்தரான திரு. காளிமுத்து என்பவருக்கும் வேலை மேற்பார்வையாளர் திரு.நாகராசா சுதர்சன் என்பவருக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டதாக பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தரை விசாரித்தபோது தெரியவந்துள்ளது. தகவல் பதிவேடு களவாடப்பட்டமை, மூலிகைப் பண்ணையில் பேணப்பட்ட In-Out பதிவேட்டில் மரங்கள் வெட்டப்பட்டு வெளியில் கொண்டுசெல்லப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட நடவடிக்கைகளைப் பதிவுசெய்த பதிவேட்டின் பக்கங்கள் அகற்றப்பட்டமை எம்மால் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. மேலும். விசாரணையின்போது தெரிவித்ததற்கு மேலதிகமாக சில விடயங்களை திரு.நாகராசா சுதர்சன் தனது கைப்பட பதிவுசெய்து கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

9. மூன்றாவதாக. திரு.சுப்ரமணியம் குகதாசன் (விவசாயபீட சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்) என்பரை விசாரித்தபோது சிற்றுண்டிச்சாலைக்கான விறகுகளை வெளியே கொள்வனவு செய்வது வழக்கமாக இருந்தபோதும் மரங்கள் தறிக்கப்பட்டு தீராந்திகளாக்கப்பட்ட காலப்பகுதியில் மாத்திரம் சிற்றுண்டிச்சாலைக்குத் தேவையான விறகுகளை மாணவர் ஒன்றியத்தின் ஊடாக பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பெற்றமை தெரியவந்துள்ளது. மேலும். திரு.சக்திவேல் சுதர்சன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்) மற்றும் திரு.வேலு சுப்ரமணியம் (ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர்) அவர்களை விசாரணைக்கு உட்படுத்தியபோது தீராந்திகளாக வெட்டிய பின்பு எஞ்சிய பிறவெட்டு மரங்கள் சிற்றுண்டிச்சாலை உரிமையாளரால் கொண்டுசெல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.

10. திரு.நாகராசா சுதர்சன் (வேலை மேற்பார்வையாளர்) அவர்கள் விசாரணையின் பின்பு 19.10.2017ல் தொலைபேசி ஊடாக திரு.சுப்ரமணியம் குகதாசன் (விவசாயபீட சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்) அவர்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி இருந்ததுடன் அவர் வேலை காரணமாக அழைப்பிற்குப் பதிலளிக்காமையால் அன்று மதியம் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று திரு.சுப்ரமணியம் குகதாசன்

A. C. Thanu.